# கிரேக்க கல்வியாளர்களுடன் பிரதமரின் சந்திப்பு

ஆகஸ்ட் 25, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி, ஏதென்ஸ் பல்கலைக்கழகத்தின் இந்தியவியலாளரும்  சமஸ்கிருதம் மற்றும் இந்தி பேராசிரியருமான பேராசிரியர் டிமிட்ரியோஸ் வசிலியாடிஸை, ஏதென்ஸ் பல்கலைக்கழகத்தின் சமூக இறையியல் துறையின் உதவிப் பேராசிரியரான டாக்டர் அப்போஸ்டோலோஸ் மைக்கேலிடிஸ் அவர்களுடன் 25 ஆகஸ்ட் 2023 அன்று ஏதென்ஸில் சந்தித்தார்.

2. அவர்கள் இந்திய மதங்கள், தத்துவம் மற்றும் கலாச்சாரம் குறித்த தங்கள் பணிகளை பிரதமருக்கு விளக்கினர்.

3. இந்திய மற்றும் கிரீஸ் பல்கலைக் கழகங்களுக்கிடையேயான கல்விசார் ஒத்துழைப்பை ஆழமாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் இந்தியா-கிரீஸ் கலாச்சார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்த விவாதங்களுக்கு கவனம் செலுத்தினர்.

**ஏதென்ஸ்**
**ஆகஸ்ட் 25, 2023**